# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
# THIRD YEAR EXAMINATIONS IN COMMERCE (EXTERNAL) – 2006 / 2007
## Held in May 2007

## COM 36 – COMPUTERIZED ACCOUNTING SYSTEM

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம்: 03 மணித்தியாலங்கள்

---

01. (a) பிரபல்யமான ஐந்து கணக்கியல் மென்பொருட்களைப் பெயரிடுக.

(b) கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கியல் முறைமையின் அனுகூலங்களும், பிரதிகூலங்களும் யாவை?

(c) வரைபடமொன்றினை (Chart) உருவாக்குவதற்கான நான்கு படிமுறைகளையும் எழுதுக.

(d) இலாப நட்டமற்ற ஆய்வு (Break Even Analysis) என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(e) Pivot அட்டவணையை உருவாக்குவதற்கான படிமுறைகளை எழுதுக.

(20 புள்ளிகள்)

02. பின்வரும் தகவல்களைக் கொண்டு 30 ஜுன் 2006 இல் முடிவடைந்த 06 மாத காலத்துக்கான உற்பத்தியாளர்களுக்கான காசுப் பாதீட்டினைத் தயாரிக்குக. Cell pointer ஆனது Worksheet இல் ஏதாவது ஓர் இடத்தில் உள்ளது என அனுமானித்துக்கொண்டு ஜுன் 2006 இற்கான காசு மீதியினைக் காண்பதற்கான பொருத்தமான சூத்திரத்தை எழுதுக.

(i) 1 ஜனவரி 2006 இல் ஆரம்ப காசுமீதி ரூபா 1000/-
(ii) ஓர் அலகுக்கான விற்பனை விலை ரூபா 125/-

காசு விற்பனை 20 %
<u>கடன் விற்பனை</u>: விற்பனை நடைபெறும் காலத்தில் 40 % காசு அறவிடப்படுகின்றது.
விற்பனை நடைபெற்ற முதல் மாதத்தில் 30 % காசு அறவிடப்படுகின்றது.
விற்பனை நடைபெற்ற இரண்டாம் மாதத்தில் 25 % காசு அறவிடப்படுகின்றது.
அறவிட முடியாக் கடனாக 5 % காசு பதிவளிக்கப்படுகின்றது.

1 % கழி ஒவ்வொரு கடன் விற்பனை வருமதிக்கும் கொடுக்கப்படும்.

விற்பனை அலகுகள்

| Oct | Nov | Dec | Jan | Feb | Mar | Apr | May | June | July | Aug | Sep |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 100 | 120 | 70 | 130 | 150 | 80 | 130 | 140 | 170 | 110 | 120 | 120 |

(iii) கொள்வனவு

2005 ஒக்டோபரில் ஆரம்ப இருப்பு 20 அலகுகளாகும். அத்துடன் நிறுவனம் 25 % சரக்கிருப்பை முதல் ஆறு மாத விற்பனை அலகில் பேணுவதுடன் ஏனைய காலங்களுக்கு 15 % சரக்கிருப்பை பேணுகின்றது.

முதல் ஆறு மாதத்திற்கு ஓர் அலகு கொள்வனவுப் பெறுமதி ரூபா 75 /- ஏனைய மாதங்களுக்கு ரூபா 90/-

40 % ஆன கொள்வனவுக் கொடுப்பனவு கொள்வனவு செய்த அடுத்த முதல் மாதத்திலும் மீதித் தொகை இரண்டு மாதத்திலும் செலுத்தப்படுகின்றது.

(iv) முன்னுரிமைப் பங்கு ரூபா 30,000/- இற்கு 10 % பங்கிலாபமாக 1 ஏப்ரல் 2006 இல் செலுத்தப்படும்.

(v) மே 2006 இல் வாகனக் கொள்வனவுக்கான முற்பணமாக ரூபா 20,000/- பெறப்படும்.

(vi) ஏப்ரல் மாதத்தில் வருமான வரி ரூபா 35,000/- செலுத்தப்படும்.

(viii) ஒக்டோபர் 2005 இல் ரூபா 60,000/- பெறுமதியான இயந்திரம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்காக நவம்பர் 2005 இலிருந்து ரூபா 2500/- தவணைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

(20 புள்ளிகள்)

03. (a) Master File, Transaction File, Temporary File என்பவற்றை விளக்குக.

(b) உமது வியாபாரத்தை இலகுவாக மேற்கொள்வதற்காக Sage line 50 பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. Sage line இல் உள்ள கணக்கியல் இலக்க / குறியீட்டு எல்லைகளைக் (Number Range) குறிப்பிடுக.

(c) 31 மார்ச் 2006 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் தகவல்களை மையமாகக் கொண்டு ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்குவதற்கான படிமுறைகளை எழுதுக.

நிறுவனம் தொடர்பான தகவல்கள்

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : | ABC Co. (Pvt) Ltd. |
| விலாசம் | : | N0.256, Galle Road, Colombo -04 |
| தொலைபேசி இல. | : | 0112272256 |
| VAT பதிவு இல. | : | 9000-300-7956. |
| VAT | : | 15 %. |
| பொருள் ஆய்வு | : | மூலப் பொருள்<br>முடிவுப் பொருள் |
| பிரிவுகள் | : | விற்பனை<br>கொள்வனவு<br>சந்தைப்படுத்தல் |
| வாடிக்கையாளர் ஆய்வு: | | நாடு<br>பிராந்தியம்<br>விற்பனை பிரதிநிதி |
| விநியோகஸ்தர் ஆய்வு: | | பிராந்தியம்<br>பிரதிநிதி குறியீடு |

(25 புள்ளிகள்)

04. (a) பிரபல்யமான நிறுவனமொன்றிற்கு நீர் ஒரு கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளீர். பின்வருவனவற்றிற்கு புதிய கணக்கினை உருவாக்க உம்மை மேலதிகாரி வேண்டுகின்றார். Sage line 50 எனும் மென்பொருளின் உதவியோடு பொருத்தமான படிமுறைகளை எழுதுக.

(i) புதிய பொருள் ஒன்றினை உருவாக்குதல் (Create a new product)
(ii) புதிய வாடிக்கையாளர் ஒருவரை உருவாக்குதல் (Create a new customer)
(iii) புதிய வழங்குனர் ஒருவரை உருவாக்குதல் (Create a new supplier)
(iv) புதிய கணக்கேடொன்றினை உருவாக்குதல் (Create a new ledger)
(v) புதிய வங்கிக் கணக்கு ஒன்றினை உருவாக்குதல் (Create a new bank account)

(b) பின்வருவனவற்றை நிறைவேற்றத் தேவையான படிமுறைகளை எழுதுக.

(i) கொள்வனவு விலைப்பட்டியலை கொள்வனவுக் கட்டளை செய்முறை மூலமாக நிறைவேற்றல். அத்துடன் அதற்கான கொடுப்பனவினையும் மேற்கொள்ளல்.

| | |
|---|---|
| Invoice No. | 54665 |
| Supplier Code | BAT 01 |
| Product Code & Description | WAMOT – Motor |
| Quantity | 10 |
| Purchase price | 10,000 /- |

(ii) விற்பனைப் பட்டியல் விற்பனைக் கட்டளை செயன்முறை மூலமாகவும், வாடிக்கையாளரிடமிருந்து பெறுவனவையும் பெற்றுக்கொள்ளல்.

| | | |
|---|---|---|
| Customer Code | : | ACC01 |
| Product Code & Description | | COOLR Cooler Fan |
| Quantity | : | 3 |
| Selling price | : | 4,500/- |

(iii) Batch செயன்முறை மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

(a) Access சர்வதேச நிறுவனத்திற்கு 19,000 /- தேறிய விற்பனை
(b) Barleet கம்பனியிலிருந்து 30,000/- (தேறிய பெறுமதி) கொள்வனவு
(c) ACC01 நிறுவனத்திலிருந்து ஒரு Cooler Stand உட்திரும்பல்
(d) வங்கி நடைமுறைக் கணக்கிலிருந்து சில்லறைக் காசேட்டிற்குள் ரூபா 1500/- மாற்றப்படுகின்றது.

(25 புள்ளிகள்)

பொருத்தமான உதாரணங்களோடு பின்வருவனவற்றிற்கான படிமுறையினை எழுதுக.

(a) எதிரிடையான நடவடிக்கை (Contra Entry)

(b) வாடிக்கையாளர் விலைப்பட்டியல் திரும்பலுக்கான மீள்கொடுப்பனவு (Customer Invoice Refund)

(c) கடன் பத்திரம் திரும்பலுக்கான மீள் கொடுப்பனவு (Refund Credit Notes)

(d) வாடிக்கையாளர் நடவடிக்கையினை பதிவளித்தல் (Write Off a customer transaction)

(e) HNB இயிலிருந்து Peoples Bank இற்கு ரூபா 10,000/- ஐ மாற்றுதல் (Fund transfer between two banks Rs. 10,000/- (HNB to Peoples Bank).

(10 புள்ளிகள்)

***